**செய்தி வெளியீடு எண் : 355** **நாள்: 08.03.2022**

## செய்தி வெளியீடு

தமிழ்நாடு அரசின் சமூக நலத்துறையின் மூலம் மாற்றுத்திறனாளிகளுக்காக மேற்கொள்ளப்பட்டு வந்த நலப்பணிகளை பிரத்தியேகமாக நடவடிக்கை மேற்கொள்ளும்பொருட்டு மாற்றுத்திறனாளிகள் நலுனுக்கென மாற்றுத்திறனாளிகளுக்கான தனி இயக்குநரகம் **1993 –**ம் ஆண்டு உருவாக்கப்பட்டது. தனி இயக்குநரகம் உருவாக்கப்பட்ட பின்னர், சமூக நலத் துறையிலிருந்து இத்துறைக்கு பணியிடங்கள் பிரித்து கொடுக்கப்பட்டது. மேலும், **1997–**ஆம் ஆண்டு மாவட்டந்தோறும் மாவட்ட மறுவாழ்வு மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, மாவட்ட மறுவாழ்வு அலுவலர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு, மாவட்ட அளவில் இளநிலை மறுவாழ்வு அலுவலர், தொழில்வழிகாட்டி அலுவலர், முடநீக்கியல் தொழில் நுட்பாளர், பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர், கேட்டல் மற்றும் பேச்சுப் பயிற்சியாளர், உரையாடல் திறன் மேம்பாட்டாளர், ஒளி அளவீட்டாளர் மற்றும் செயல்திறன் உதவியாளர் ஆகிய பணியிடங்கள் உருவாக்கப்பட்டது. இத்துறையில் பதவி உயர்வு வழங்குவதற்கான சிறப்பு விதிகள் ஏதும் இதுநாள் வரை உருவாக்கப்படவில்லை.

இப்பணியிடங்களில், தொழில்வழிகாட்டி பணியிடத்திற்கான தகுதியாக முதுநிலை பட்டமும், கேட்டல் மற்றும் பேச்சுப் பயிற்சியாளருக்கு இளநிலை பட்டமும், முடநீக்கு தொழில்நுட்பாளருக்கு பட்டயப்படிப்பும், ஒளிஅளவீட்டாளருக்கு இளநிலை பட்டமும், உரையாடல் திறன் மேம்பாட்டாளருக்கு மேல்நிலை கல்வியுடன் (+**2)** பட்டயப் படிப்பும், பல்நோக்கு மறுவாழ்வு அலுவலர் மற்றும் செயல்திறன் உதவியாளர் ஆகிய இரு பதவிகளுக்கும் **10**ஆம் வகுப்புடன் சான்றிதழ் படிப்பும் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில், மாற்றுத்திறனாளிகளுக்கான இயக்குநரகத்தில் பணியாற்றும் சார்நிலை பணியாளர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்காக அரசாணை எண்.**47–**இன் படி சமூக நலம் மற்றும் சத்துணவு திட்ட **(**சந**–9)** த் துறை நாள் **23.03.2009** மற்றும் அரசானை நிலை எண்.**14** மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, நாள் **25.05.2010–**இன் படி ஆணைகள் வெளியிடப்பட்டது. ஆனால், மேற்கண்ட இரண்டு அரசாணைகளும் இவ்வியக்குநரகத்தில் பணியாற்றும் அனைத்து பணியாளர்களையும் உள்ளடக்கி வெளியிடப்படவில்லை. மேற்படி அரசாணைகளின்படி தொழில்வழிகாட்டி அலுவலர், முடநீக்கு தொழில் நுட்பாளர் மற்றும் பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் ஆகியோருக்கு மட்டுமே பதவி உயர்வு வழங்கப்பட்டு வந்தது. இத்துறையில் பணியாற்றும் கேட்டல் மற்றும் பேச்சுப் பயிற்சியாளர், உரையாடல் திறன் மேம்பாட்டாளர், ஒளி அளவீட்டாளர் மற்றும் செயல்திறன் உதவியாளர் போன்றவர்களுக்கு பதவி உயர்வுக்கான வழிவகையில்லை. எனவே, விடுபட்ட பதவிகளில் பணிபுரியும் பணியாளர்கள் மேற்கண்ட

அரசாணைகளை இரத்து செய்து, அவர்களுக்கும் பதவி உயர்வு வழங்கும் வகையில் பணிவிதிகளை ஏற்படுத்த கோரி மாண்பமை சென்னை உயர் நீதிமன்றத்தில் கடந்த 2009 – ஆம் ஆண்டு வழக்கு தொடுத்தனர். மேலும், 2010, 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிலும் வழக்குகள் தொடரப்பட்டன.

இவ்வழக்குகளை விசாரித்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்றமானது மேற்கண்ட விதிகளிலுள்ள முரண்பாடுகளை நீக்கும் பொருட்டு ஒரு குழுவினை அமைத்து முரண்பாடுகளை நீக்குவதாக அரசு கூறியதன் பேரில்அவ்வாறே செயல்பட ஆணையிட்டது. அவ்வுத்தரவிற்கிணங்க தமிழ்நாடு அரசின் சட்டத்துறை, மனித வள மேம்பாட்டுத் துறை மற்றும் மாற்றுத்திறனாளி நலத் துறை ஆகிய துறை பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றினை தமிழ்நாடு அரசு உருவாக்கி மாற்றுத்திறனாளி நல இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றும் அனைத்து சார்நிலை பணியாளர்களையும் உள்ளடக்கிய பதவி உயர்வு விதிகளை உருவாக்க அரசு பணித்தது. மேற்படி குழுவானது பல்வேறு நாட்களில் கூடி ஒருங்கிணைந்த வரைவு விதிகளை உருவாக்கி சம்பந்தப்பட்ட துறைகளின் கருத்துக்களையும் திருத்தங்களையும் பரிசீலனை செய்து மேற்கூறிய வரைவு விதிகளில் கூறப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு சம்பந்தப்பட்ட அனைத்து துறைகளின் அனுமதி பெறப்பட்டு மாற்றுத் திறனாளி நல இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றும் சார்நிலை பணியாளர்களுக்கான ஒருங்கிணைந்த பதவி உயர்வு விதிகள்14.02.2022 நாளிட்ட அரசாணை எண்.03, மாற்றுத்திறனாளிகள் நலத் (மா.தி.ந.1) துறையால் வெளியிடப்பட்டது.

புதிதாக வெளியிடப்பட்ட அரசாணையின்படி தொழில்வழிகாட்டி அலுவலர், கேட்டல் மற்றும் பேச்சு பயிற்சியாளர், முடநீக்கு தொழில் நுட்பாளர், உரையாடல் திறன் மேம்பாட்டு நிபுணர், ஒலி அளவீட்டாளர், பல்நோக்கு மறுவாழ்வு உதவியாளர் மற்றும் செயல்திறன் உதவியாளர் ஆகியோருக்கு 1 : 3 : 3 : 1: 1: 3 : 3 என்ற விகிதாச்சார முறையில் பதவி உயர்வு வழங்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் இத்துறையில் உள்ள அனைத்து பணியிடங்களும் தொழில் நுட்பம் சார்ந்தது என்பதால், இளநிலை உதவியாளர் பணியிடம் ஒன்றே பதவி உயர்வின் மூலம் வழங்கப்படுகிறது.

அரசு விதிகளின்படி இளநிலை மறுவாழ்வு அலுவலர் பதவி, நேரடி நியமனம் மற்றும் பதவி உயர்வு மூலம் வழங்கப்படுகிறது. இதில் நேரடி நியமனம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் நிரப்பப்படுகிறது. நேரடி நியமனம் மூலம் இளநிலை மறுவாழ்வு அலுவலர் நிரப்பிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கடந்த பிப்ரவரி மாதத்தில் மேற்கூறிய வழக்குகள் விசாரணைக்கு வந்தபோது மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் மேற்படி அரசாணையானது பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்பட்டது. இவ்வரசாணையினை பரிசீலனை செய்த மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மேற்கூறிய வழக்குகளின் மனுதாரர்கள் கோரிய

நிவாரணங்கள் இவ்வரசாணை மூலம் நிறைவேற்றப்பட்டது என்பதால், அவ்வழக்குகள் அனைத்தையும் தள்ளுபடி செய்து மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் உத்தரவு பிறப்பித்தது.

மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அலுவலகத்தில் பணியாற்றி வரும் சார்நிலை பணியாளர்களுக்கு பதவி உயர்வு மூலம் இளநிலை மறுவாழ்வு அலுவலர் பதவி உயர்வு வழங்குவது என்பது ஏற்புடையதாகும். இந்நிலையில் இதில் எவ்வித விதிமீறல்களும் இல்லை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**